பெங்களூரு ஐ.ஐ.எம். நிறுவனத்தில் அரசு திட்டங்களுக்குப் பயன்படும் வகையில்

# புள்ளி விவரங்கள் தொகுப்பது குறித்து 3 நாட்கள் சிறப்புப் பயிற்சிகள்!

## தமிழ்நாடு அரசின் பல்வேறு துறை சார்ந்த 25 அலுவலர்கள் பங்கேற்பு!

சென்னை, பிப். 13- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி தமிழ்நாட்டு வரலாற்றில் முதன் முறையாக பெங்களூரு ஐ.ஐ.எம். நிறுவனத்தில் அரசுத் திட்டங்களுக்குப் பயன்படும் வகையில் புள்ளி விவரங்கள் தொகுப்பது குறித்து நேற்று முதல் 3 நாட்களுக்கு (பிப்ரவரி 12 முதல் 14 வரை) சிறப்புப் பயிற்சிகள் நடைபெறுகிறது. இதில் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் சார்ந்த 25 அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2024-2025 ஆம் ஆண்டிற்கான மனித வள மேலாண்மைத் துறையின் மானிய கோரிக்கையின் போது 26.06.2024 அன்று சட்டமன்றத்தில்

“அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் முறையாக மக்களிடம் சென்றடைகிறதா என்பதனை ஆய்வு செய்யவும், தகுதியுடைய பயனாளிகள் எவரேனும் விடுபட்டு விட்டனரா என்பதை கண்டறியவும், கடைக்கோடி மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்றடையவும், இதன் வாயிலாக அரசுத் திட்டங்களை மேலும் செம்மைப் படுத்தவும் அரசு அலுவலர்களுக்கு தரவுப் பகுப்பாய்வு (Data Analysis) குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இந்நிதியாண்டில் இதற்கென ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்”. எனும் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

இந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

இவற்றின் அடிப்படையில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறையின் முதன்மைச் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசின் வரலாற்றிலேயே முதல் முறையாக பல்வேறு அரசுத் துறைகளின் புள்ளி விவரங்களை அறிவியல் முறையில் தொகுத்தல் குறித்து பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனம் (Indian Institute of Management (IIM), Bangalore) ”Business Analytics - Science of Data Driven Decision Making ” 12.02.2025 முதல் 14.02.2025 வரை மூன்று நாள்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளில் பங்கேற்பதற்காக பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து 25 அலுவலர்கள் தமிழ்நாடுஅரசினால் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் முதல்வரின் முகவரித் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை, கூட்டுறவுத்துறை, பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, வணிகவரித் துறை, சென்னை மநாகராட்சி, பேரூராட்சிகள் இயக்ககம், பதிவுத்துறை, மின் பகிர்மானக் கழகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, காவல் துறை, மனிதவள மேலாண்மைத் துறை, தமிழ்நாடு குற்ற ஆவணக் காப்பகம், வேளாண் துறை, ஆகிய துறைகள் சார்ந்த அரசு அலுவலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சிக்காக தமிழ்நாடு அரசு மொத்தம் 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தியாவிற்கே முன்னோடியாக பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்வரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் யாருக்கும் விடு படாமல் கடைக்கோடி மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளபடி இப்பயிற்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.





சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி, சின்னசேலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பாண்டியன்குப்பம் ஊராட்சியில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் புதிதாக சமுதாயக்கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தலைமையேற்று அடிக்கல் நாட்டி கட்டுமானப்பணியை துவங்கி வைத்தார், நிகழ்வில் சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும், ஒன்றிய குழு துணை பெருந்தலைவருமான வி.வி.அன்புமணிமாறன் முன்னிலை வகித்தார், மேலும் இந்நிகழ்வில், கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# “யாரும் பேசாத சமஸ்கிருத மொழிக்கு மக்கள் வரிப்பணத்தை செலவிடுவது அவசியமா?”

## மக்களவையில் – கழக மக்களவைக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் காட்டம்!

**புது தில்லி, பிப்ரவரி 13, மக்களவையில், நேற்று முன்தினம் அவைத் தலைவர் ஓம் பிர்லா “நாடாளுமன்ற செயல்பாடுகள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு சமஸ்கிருதம் உட்பட 22 இந்திய மொழிகளில், வழங்கப்பட்டு வருகின்றன” என அறிவித்தார்.**



இதற்கு பதிலளித்த கழக மக்களவைக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், “நீங்கள் மாநிலங்களின் அதிகாரப்பூர்வ மொழிகளுக்காக மொழிபெயர்ப்பு செய்து வழங்குவது நிச்சயமாக வரவேற்கத்தக்கது. ஆனால், எந்த மாநிலம் சமஸ்கிருதத்தை அதன் அதிகாரப்பூர்வ மொழியாக அறிவித்துள்ளது? பேச்சு வழக்கில் இல்லாத சமஸ்கிருதத்திற்காக ஏன் மக்கள் வரிப்பணத்தை வீணடிக்கிறீர்கள்? இந்தியாவின் எந்த மாநிலத்திலும் யாரும் சமஸ்கிருத மொழியை பயன்படுத்தவில்லை!

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, வெறும் 24,821பேர் மட்டுமே சமஸ்கிருதம் பேசுவதாகக் கூறப்படுகிறது. இந்த தரவு இருக்கும்போது, உங்கள் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தங்களுக்காக ஏன் பொதுமக்களின் வரிப்பணத்தை வீணடிக்க வேண்டும்?” என்று கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார்.

பச்சிளம் குழந்தைகள் மரணத்தைத் தடுப்பதில்

# தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுகிறது!

## மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, பிப். 13 - பச்சிளம் குழந்தைகள் மரணத்தைத் தடுப்பதில் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டுள்ளது என மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமுவின் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் ஜே.பி.நட்டா பதில் அளித்தார்.

இந்தியாவில் பிரசவ கால தாய் சேய் மரணங்கள், பச்சிளம் குழந்தை மரணங்கள் எவ்வளவு? அதைத் தடுக்க, குறைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? இந்தியாவில் 16 சதவிகித கர்ப்பிணிப் பெண்களுக்கு எந்தவிதமான ஊட்டச்சத்தும் வழங்கப்படுவதில்லை என்பது உண்மை தானா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அளித்த பதில்:

இந்தியாவில், பிரசவ காலத்தில் தாய் இறப்பது தொடர்பான எண்ணிக்கை கடந்த 30 ஆண்டுகளில் 83 சதவிகிதம் குறைந்திரு க்கிறது. உலக அளவில் இதே கால கட்டத்தில் 42 சதவிகிதம்தான் குறைந்திருக்கிறது.

பச்சிளம் குழந்தைகள் மரணிக்கும் விகிதமும் இந்தக் காலகட்டத்தில் 65 சதவிகிதம் குறைந்திருக்கிறது. உலக அளவில் இது 51 சதவிகிதமாக இருக்கிறது.

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து பிரசவ காலம் தொடர்பான, கர்ப்பிணிகள் தொடர்பான விழிப்பு ணர்வு முகாம்களை ஒன்றிய அரசு நாடு முழுக்க நடத்துகிறது. குறிப்பாக மாதத்தில் ஒரு நாள் கிராமப்புற பகுதிகளில் விழிப்பு ணர்வு முகாம் நடத்துவது, சுகாதார மேளாக்கள் நடத்துவது, ஊட்டச்சத்து இலவசமாக வழங்குவது மற்றும் அது தொடர்பான ஆலோசனை வழங்குவது, குழந்தையின்மை தொடர்பான சிகிச்சைகளுக்கு ஆலோசனை வழங்கும் முகாம்கள் நடத்துவது, நடமாடும் சுகாதார மையங்களை கிராமப்புறங்களில் பயன்படுத்துவது போன்ற நடவடிக்கை கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படுகின்றன.



இதுதவிர பிரசவ காலத்தைக் கடக்கும் பெண்களின் நலனுக்காக பிரதமரின் பெயரில் அமைந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதம் 9ம் தேதி இலவச சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கும் திட்டமும் அமலில் இருக்கிறது. இதற்காக 2021-22 ம் ஆண்டு 9 கோடி ரூபாயும், 2022-23 ம் ஆண்டில் 42 கோடி ரூபாயும், 2023-24ம் ஆண்டில் 83 கோடி ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் முறையே 3.46 லட்சம்; 3.29 லட்சம்; 3.31 லட்சம் கர்ப்பிணிப் பெண்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஜே.பி. நட்டா பதிலளித்தார். இந்த பதிலுடன் அவர் இணைத்துள்ள விபரங்களின் அடிப்படையில்,

தமிழகத்தைப் பொறுத்தவரை, ஒரு லட்சம் கர்ப்பிணிகளில் 54 பேர் மரணிக்கிறார்கள் என்று தரவுகள் சொல்கிறது. பிரசவ காலத்தில் தாய் மரணிக்கும் நிகழ்வை குறைவாக வைத்திருக்கும் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவது சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது.

அதேபோல பிரசவ காலத்தில் குழந்தைகள் இறப்பது தமிழகத்தில் ஆயிரம் பேருக்கு இரண்டு என்ற அளவிலேயே இருக்கிறது. பச்சிளம் குழந்தைகள் மரணிப்பதில் பெரிய மாநிலங்களைப் பொறுத்தவரை ஆயிரம் குழந்தைகளில் 9 பேர் என்ற குறைந்த எண்ணிக்கையைப் பதிவு செய்து சிறப்பாக செயல்பட்டு தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இருக்கிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் குறிப்பிட்டார்.

